பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 20 வியாழக்கிழமை (06.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 282

# திருமலை - முல்லைத்தீவுக்கு இடையே சிங்கள மாவட்டம் அமைக்க முஸ்தீபு!

## நாடாளுமன்றத்தில் சம்பந்தன் அதிர்ச்சித் தகவல்



கொழும்பு, செப்ரெம்பர் 6

திருகோணமலைக்கும் முல்லைத்தீவுக்கும் இடையே அந்த மாவட்டங்களின் சில கிராமங்களை இணைத்து அவற்றில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, அப்பிரதேசத்தில் தனிச் சிங்கள மாவட்டம் ஒன்றை உருவாக்கும் திட்டத்துடன் அரசு செயற்படுகின்றது.

தமிழர் தாயகத்தைத் துண்டுபடுத்தும் இத்தகைய புதிய சிங்களமயமாக்கல் சதித்திட்டம் பற்றிய அதிர்ச்சித் தகவலை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான இரா.சம்பந்தன்.

''கிழக்கில் அரசு மேற்கொண்டுவரும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை, மனித உரிமை மீறல்கள், சிங்கள மயமாக்கல் மற்றும் அரசின் அனுசரணையுடன் இயங்கும் ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்கள் போன்றவை வடக்கு - கிழக்கில் எதிர்காலத்தில் பயங்கரவாதிகள் உருவாகக் காரணமாக அமையப்போகின்றன. அங்குள்ள இளைஞர்கள் மத்தியில் அரசு அவ்வாறானதொரு அடித்தளத்தை இப்போது இட்டுள்ளது'' - என்றும் அவர் கூறினார்.

''வடக்கு - கிழக்கில் அரசால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐ.நா. கண்காணிப்புக் குழு இலங்கையில் செயற்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது'' - என்றும் அவர் கூறினார். வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பாக சபையில் விசேட பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அதன்மீதான விவாதத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றிய சமயமே அவர் இப்படிக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு - கிழக்கில் நடைபெறும் வன்முறைகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு ஓரிரு விடயங்களை மாத்திரமே தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் அதிக எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பாக நாம் அரசுக்கு சில வேண்டுகோள்களை விடுத்தோம். அரசு கேட்கவில்லை. கிழக்கில் பெரும்பான்மை இன மக்களுக்கு அரசு காணிகளை விற்கின்றது. அதைத் தடுக்க நாம் அரசை வேண்டினோம். அரசு அதையும் கேட்கவில்லை.

(07 பக்கம் பார்க்க)

# முள்ளிக்குளத்தில் 850 பேர் சிக்குண்டனர்; பாதுகாப்பற்ற நிலையில் தவிக்கின்றனர்!

## அவர்களை மீட்க உதவிகோருகின்றார் மன்னார் ஆயர்

மன்னார், செப்.6

சிலாவத்துறையில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையால், சுமார் 850 பொதுமக்கள் முள்ளிக்குளம் பகுதியில் சிக்குண்டனர். அவர்களது நிலை மிகவும் ஆபத்தானதாக உள்ளது.

198 குடும்பங்களைச்சேர்ந்த அந்த மக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு உதவுமாறு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதுகாப்பற்ற நிலையில் ஆபத்தில் சிக்கியுள்ள அவர்களை தரைமார்க்கமாக பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்ல நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயன் தரவில்லை என்றும் ஆயர் தெரிவித்தார். தவித்துத் துடித்துக்கொண்டிருக்கும் அவர்களுக்கு கடல்மார்க்கமாக அத்தியாவசியப் பொருள்களை அனுப்பவும் அங்கிருந்து அவர்களை மீட்கவும் ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஆயர் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.



சிக்குண்டுள்ள அந்த மக்களைக் கடல் மார்க்கமாக அங்கிருந்து அகற்றுவதில் தமக்கு ஆட்சேபம் எதுவும்கிடையாது

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை முடிவை உயர் நீதிமன்றம் நிராகரித்தது

கொழும்பு,செப்.6

தரம் - 1 வகுப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் அமைச்சரவை மேற்கொண்ட திருத்தங்களை உயர் நீதிமன்றம் நேற்று அடியோடு நிராகரித்துவிட்டது.

உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழிகாட்டியபடி சுற்றுநிருபத்தைத் தயாரித்து அடுத்த வெள்ளிக்கிழமைக்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அதனை அனுப்பி வைக்கும்படியும் கல்வி அமைச்சின் செயலாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# சிலாவத்துறை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமே; அதைத் தாம் மீட்டுவிட்டதாக அரசு அரசியல் நாடகம்!

## புலிகளின் இராணுவப் பேச்சாளர் சாடுகிறார்

கொழும்பு, செப்.6

சிலாவத்துறை, மதவாச்சி - மன்னார் வீதிக்குத் தெற்காக உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமே. அப்படியிருக்க விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்தப் பிரதேசத்தை மீட்டுவிட்டதாக அரசாங்கம் அரசியல் நாடகமாடுகிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

சிலாவத்துறையில் ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயங்கவில்லை. எமது மனிதாபிமானப் பணியாளர்களே அங்கிருந்தனர். அவ்வாறிருக்க சிலாவத்துறையை மீட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்திருப்பது ஓர் அரசியல் நாடகமே. - என்றும் இளந்திரையன் சுட்டிக்காட்டினார்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் மேலும் கூறியதாவது:-

மன்னார் சிலாவத்துறையை மீட்டதாக சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருப்பது ஓர் அரசியல் நாடகம். (08 ஆம் பக்கம் பார்க்க)



## வான்புலித் தாக்குதலை சமாளிக்க இந்தியா தயார் நிலையில்

புதுடில்லி, செப்.6

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்படக் கூடிய எந்த வான் தாக்குதலில் இருந்தும் இந்திய ஆள் புலத்தைப் பாதுகாப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

-இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தனி இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் சில எம்.பிக்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# இராமர் அணையைக் காக்க பஸ், ரயில் மறியல் போராட்டம்

## ஊர்ஜிதம் செய்கிறார் பாதுகாப்பு இயக்கத் தலைவர்

சென்னை, செப்.6

இராமர் அணையைத் தகர்க்கும் செயற்பாட்டைத் தடுப்பதற்காக எதிர்வரும் 12 ஆம் திகதி புதன்கிழமை நாடளாவிய ரீதியில் பஸ் மற்றும் ரயில் மறியற் போராட்டங்கள் நடைபெற உள்ளன. இந்து முன்னணி மற்றும் பாரதிய ஜனதா கட்சி ஆதரவில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இராமேஸ்வரம் இராமர் பாலம் (இராமர் அணை) பாதுகாப்பு இயக்கத் தலைவர் ராமகோபாலன் இதனை நேற்று ஊர்ஜிதம் செய்தார்.

மக்கள் கருத்தை கேட்காமல் இராமர் பாலத்தை இடிக்கும் நடவடிக்கையில் இறங்கியதால்தான் அதனைப் காப்பதற்குத் தொடர்ந்து போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

இந்திய இராணுவம் மூலம் சக்திவாய்ந்த குண்டு வைத்து இராமர் பாலத்தை தகர்க்க உள்ளதாக எங்களுக்கு தகவல் வந்துள்ளது. இதை தடுத்து நிறுத்துவோம் - என்றார் அவர். (அ)

## நவ்று அகதிகள் தொடர்ந்தும் உண்ணாவிரதம்

கொழும்பு, செப். 6

ஆஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள நவ்று தீவில் தங்கவைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் உண்ணாவிரதப் போராட்டம்நேற்றுநான்காவது நாளாகவும் தொடர்ந்தது.

ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் சென்ற நிலையில், ஆஸி அரசால் நவ்று தீவுகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கு ஆறு மாதங்களுக்கு மேல் தங்கவைக்கப்பட்டிருக்கும் 83 தமிழர்களும், தமது அகதி விண்ணப்பங்கள் விரைந்து பரிசீலிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட வேண்டும் எனக் கோரியே உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

02.09.2007 ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட ''வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு'' எனும் வரலாற்றுப் பொக்கிசத்தை கால வெள்ளத்தால் கரைந்து போகா வண்ணம் ஆவணமாக்கி இலவசமாக உவந்தளித்த

**திருவாளர் க.பேரம்பலம்**

ஆசான் அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதுடன் அவரது பணி மென்மேலும் வளர்ச்சியடையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உசன், மிருசுவில். (64539) உசன் கிராம அபிவிருத்திச் சங்கம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

913 நீலம்

வெற்றி இலக்கங்கள்

**17 26 41 48**

தனுசு

04-09-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4269712 - 4284956

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,870 | 10/- | 3,388,700/- |
| 2 இலக்கங்கள் | 31,162 | 20/- | 623,240/- |
| 1 இல. + லக்கினம் | 30,806 | 30/- | 924,180/- |
| 2 இல. + லக்கினம் | 2,797 | 100/- | 279,700/- |
| 3 இலக்கங்கள் | 820 | 500/- | 410,000/- |
| 3 இல. + லக்கினம் | 80 | 5,000/- | 400,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | |
| மொத்தம் | | | 6,425,820/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,544 | | 7,449,320/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,757,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 4281983-2-16 |
| நுவரெலியா | 4271958-7-70 |
| கொழும்பு | 4275582-4-55 |
| கொழும்பு | 4282717-5-98 |
| கம்பஹா | 4278439-9-50 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**நாகேந்திரம் லிங்கநாதன்**

(இலங்கை மின்சார சபை ஊழியர் - Linesman)

தோற்றம் 17-04-1953 மறைவு 16-09-2006

திதி: தசமி

*நிலையில்லா இவ்வுலகில்*
*நிலைத்துவிட்ட உன் அன்பால் யாவருக்கும்*
*இனியவராய் வாழ்ந்து*
*எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்*
*நினைவிழக்க முடியாமல் நாம்*
*நீந்துகின்றோம் கண்ணீர்க் கடலில்*
*இந்நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஏழாலை மேற்கு, ஏழாலை. (64531) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை அபிராமிப்பிள்ளை

பாலாவோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை அபிராமிப்பிள்ளை நேற்று (05.09.2007) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய, வைத்தியசாலை மேற்பார்வையாளர், யாழ்ப்பாணம்)யின் மனைவியும் திருமதி நல்லதம்பி தங்கம்மாவின் அன்புச் சகோதரியும் ந.சரவணப்பெருமாள் (சுவிஸ்), ந.கணேசலிங்கம் (ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் பெரிய தாயாரும் ச.சு.அம்பலவாணர், ச.சு. ஆறுமுகம், வே.இராசரத்தினம் ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2007) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர், களபூமி திக்கரை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **ச.சு.ஆறுமுகம்** (பெறாமகன்).

(சி-53578)

## மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு 10ஆம் திகதிவரை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 6

குடாநாட்டுப் பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு வழங்கும் இறுதித் தினம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு நேற்று வரை மட்டுமே வழங்கப்படுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பாடசாலைகள் நேற்று முன் தினமே மூன்றாம் தவணைக்காகத் திறக்கப்பட்டுள்ளதால் சீட்டு வழங்கும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது - என்றார். (202)

## துயர் பகிர்கிறோம்

வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி பிரதேச செயலக மத்தியஸ்த சபை உறுப்பினர் அல்லையம்பதி துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த **வே.அருட்செல்வம்** அவர்களின் அன்புத் தாய்

**வேலுப்பிள்ளை தெய்வானை**

அவர்களின் மரணத்தில் குடும்பத்தினருடன் நாமும் துயர் பகிர்கின்றோம்.

(சி-53580) **மத்தியஸ்த சபை உறுப்பினர்கள்.**


## PMC மூலிகை கூந்தல் தைலம்

பீனிசம், பீனிசவாயு, தலையிடி, இளநரை, காது சம்பந்தமான பிரச்சினைகள், கண்மங்கல், மூக்கினால் இரத்தம் வடிதல் போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணி. முற்றும் முழுதாக மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும். இது எமது சொந்தத் தயாரிப்பு. வேறு இடங்களில் பெற்றுக்கொள்ள முடியாது.

பெற்றுக்கொள்ளும் இடங்கள்:—
PMC 445, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பரஞ்சோதி வைத்திய நிலையம், 142, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (64533)

## விற்பனைக்கு

தொலைத்தொடர்பு நிலையத்திற்குரிய கவுண்டர் மேசை, தொலைபேசி (B) பூத் மற்றும் L.G. AC (குளிரூட்டி), வீடியோக் கடைக்குரிய சோக்கேஸ், VCD க்கள், படப் பிரதிகள் (VHS) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
27, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(சி/53576) 0777 734339

## CERTIFICATE IN TALLY ACCOUNTING

பல்கலைக்கழக, உயர் தொழில்நுட்ப, A/L மாணவர் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் ஏற்ற, முற்றிலும் செய்முறையுடன் கூடிய கற்கைநெறி

பிரிவு I SAT, SUN 9-11
ஒரு பிரிவில் 10 பேர் மட்டும்
ஆரம்பம்: 08.09.2007 சனி 9 a.m.
முன்கூட்டியே பதிவு செய்யவும். (64524)

SPEED IT net, 72/28 பனிக்கர்லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 021 4591871


## மரண அறிவித்தல்

### திருமதி அழகராசா செல்வநாயகி



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகராசா செல்வநாயகி 31.08.2007 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நேசமணி தம்பதியரின் அன்புமகளும் அழகராசாவின் அன்பு மனைவியும் சர்மினி (கனடா), காயத்திரி, காலஞ்சென்ற தாரணி மற்றும் தவஷாந்த் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), தயானந்த் (யூனி யன்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும் பவித்திரனின் (கனடா) அன்பு மாமியும் அஞ்சலாதேவி, றஞ்சிதகுமாரி (ஆசிரியை - சங்குவேலி அ.த.க. பாடசாலை), அசோகன், காண்டீபன், கருணன், உதயசூரியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா, அன்னராசா, பார்வதிப்பிள்ளை, அன்னபூரணி, தெய்வநாயகி, அற்புதவேல்நாதன், பாலசுப்பிரமணியம், சவுந்தரநாயகி, ராஜேஸ்வரி, சிவகாமி, ஜெயகௌரி, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2007) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில்லேன், மல்லாகம். (64545) தகவல்: **க.அழகராசா** (கணவர்).

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராமசேவை உத்தியோகத்தர் செல்லத்துரை ஞானசபேசன் (குப்பிளான் வடக்கு ஜே/211) அவர்களின் அன்புத் தாய்

**வள்ளிப்பிள்ளை செல்லத்துரை**

அவர்கள் காலமாகியதையிட்டு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம். (64519)

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில். பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பையா இராசம்மா



புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த திருமதி தம்பையா இராசம்மா (04.09.2007) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பையா (பிரபல சட்டத்தரணியும் நொத்தாரிசும், சமாதான நீதிவானும்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (லிகிதர், புகையிரதத் திணைக்களம்), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (கணக்காளர், கல்வித் திணைக்களம்), செல்லம்மா, இரத்தினம், காசிநாதர் (லிகிதர், கல்வித் திணைக்களம்) ஆகியோரின் மைத்துனியும் கணேசன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்) காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா (பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் சிவபாதம் (ஓய்வுபெற்ற பிரதம தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற யோகேஸ்வரி, ரதிதேவி ஆகியோரின் அன்பு மாமியும் சத்தியா (விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி), வரதராஜன் (கனடா), தனீஸ்வரன் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரி), தயாளினி (தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), துஸ்யந்தன் (முகாமையாளர், மக்கள் வங்கி, கொழும்பு), கீதாஞ்சலி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), ரஞ்ஜித் (மேற்பார்வையாளர், கஜசக்தி கம்பனி), கார்த்திகாயினி (கனடா), திரிபுவனசுந்தரி (Doctor, யாழ்.போதனா வைத்தியசாலை), கணேசன், திருச்செந்தூரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பேர்த்தியும் சபிதா (கனடா), ஜனுசன் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன். (64532) தகவல்: **பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

### தம்பிப்பிள்ளை தவநாயகம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், மலேரியா தடுப்புப் பிரிவு)

சரவணை மேற்கு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, வேலணையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை தவநாயகம் அவர்கள் நேற்று (05.09.2007) புதன்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பாபிள்ளை - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியலோகநாயகியின் அன்புக் கணவரும் பிரியதர்சினியின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, காலஞ்சென்ற சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமாரசாமி (A.M.C.) அவர்களின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற Dr.முருகவேள், வேதநாயகம், வெண்தாமரைநாயகி (கனடா), ஸ்ரீரங்கன் (சுவிஸ்), கீதப்பிரியன், காலஞ்சென்ற கேசவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயானந்தன் (நோர்வே), காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் சதானந்தன், குகநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஈஸ்வரன் (கனடா), சரோஜா (கனடா), சகுந்தலாதேவி, தவம் (சுவிஸ்), உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகலனும் சியான், தயன், சசிகாந், பங்கஜன், டானியல், மெல்கி, யோசு, சுவிற்றி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புன்னம்பிட்டி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு. (64532) தகவல்: **K.சதானந்தன்** (மருமகன்).

### திருமதி குபேசன் ரஜிந்தினி (வவா)



யாழ்ப்பாணம், இருபாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குபேசன் ரஜிந்தினி (வவா) 31.08.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் குபேசனின் (குபா) அன்பு மனைவியும் ஹர்சியா, யதுர்சன், ஆரூசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செபமாலை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் சண்முகம் - தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் அமிர்தலிங்கம் (இத்தாலி), சபேசன் (சபா - பிரான்ஸ்), கணேசலிங்கம் (கணா - கனடா), மகேந்திரலிங்கம் (கனடா), பாக்கியலக்ஷ்மி (ஆசிரியை - யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), மகாலக்ஷ்மி (இந்தியா), பாலசரஸ்வதி (இந்தியா), பாலகௌரி (லண்டன்), அமுதவதி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் அமுதலிங்கம், அருள்ராஜா (கனடா), ரவீந்திரராஜா (லண்டன்), சுகுணராஜா (லண்டன்), ராஜசேகர் (கனடா), ராஜரூபா (லண்டன்), ராஜரஞ்ஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமாரதேவன் (கணக்காய்வாளர் - கைதடி ப.நோ.கூ. சங்கம்), சண்முகவேல் (இந்தியா), றூபன் (லண்டன்), ராஜபூபதி (இத்தாலி), ராஜம் (பிரான்ஸ்), வசந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகலியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (05.09.2007) புதன்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி, சாவகச்சேரி. (64543) தகவல்: **திருமதி ஜெ.அமுதவதி** (மைத்துனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் வடக்கு, கிழக்கில் 43 பேர் படுகொலை!

கிளிநொச்சி, செப். 6

வடக்கு, கிழக்கு கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் இலங்கை இராணுவத்தினரால் 43 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 27 பேர் காணாமற்போயுள்ளனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக சமாதான செயலகம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித் திருக்கும் யாழ்ப்பாணம்தான் சிறிலங்காவில் மட்டுமல்ல தெற்காசியாவிலேயே மிக மோசமான மனித உரிமை மீறல்கள் நிகழும் இடமாக உள்ளது.

குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரின் அனைத்து வகையான மனித உரிமை மீறல்களுக்கும் குடாநாட்டு தமிழர்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் சகாதேவன் டிலக்சன், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் தணிகாசலம் சசிரூபன், டெனிஸ் அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் சிவசாமி சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் தியாகச்சந்திரன், இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர்கள் இருவர் ஆகியோரும் இதே ஓகஸ்ட் மாதத்தில் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா நெடுங்கேணியில் பொது மக்கள் மீது இலங்கை வான்படை நடத்திய குண்டுத் தாக்குதலில் அரியரட்ணம் சுபாஜினி என்பவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் இலங்கை இராணுவத்தினரால் 25 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 18 தமிழர்கள் காணாமற் போயுள்ளனர்.

படுகொலை செய்யப்பட்டோர் விவரம்:


யாழ்ப்பாணம் - 28, வவுனியா - 07, மட்டக்களப்பு - 06, அம்பாறை - 03, திருகோணமலை - 02,

காணாமற்போனோர் விவரம்:

யாழ்ப்பாணம் - 18, மட்டக்களப்பு - 05, மன்னார் - 03, திருகோணமலை - 01

குடாநாட்டில் காலவரையறையற்ற ஊரடங்கு நேரங்கள், தேடுதல் நடவடிக்கை மற்றும் கைதுகள், கடற்றொழிலாளர்களை கடலில் சித்திரவதை செய்தல், மீன்பிடித் தடைகள், இலங்கை இராணுவ ஆக்கிரமிப்பில் சிக்கியிருக்கும் தமிழர் தாயகப் பகுதியில் நாளாந்தம் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவீனங்கள் என்பதுதான் இன்றைய நிலையாக உள்ளது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202)



யாழ். பொது நூலகத்திற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வழங்கிய ''மைக்றோ றீடர்'' இயந்திரத்தை யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் சி. செ. சரவணபவ ஆரம்பித்து வைப்பதை முதலாது படத்திலும் நூலகப் பொறுப்பாளர் ச. தனபாலசிங்கம் தலைமையுரை யாற்றுவதையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி எஸ். ராஜ சிங்கம் மாநகராட்சி மன்ற மற்றும் செயலாளர் இ. இரத்தின சிங்கம் ஆகியோர் அருகில் இருப்பதையும் படங்களில் காணலாம்.(படங்கள்: லக்ஸ்மன்)

# பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் தரிப்பிடம் தேவை

வலி. தென்மேற்கு, செப். 6

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் அம்புலன்ஸ் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என வைத்தியசாலை வட்டாரத்தினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ் வைத்தியசாலைக்கென சுகாதாரத் திணைக்களத்தால் அம்புலன்ஸ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த அம்புலன்ஸை நிறுத்தி வைப்பதற்கு வசதியான கட்டடம் வைத்தியசாலையில் இல்லை.

கடந்த பல மாதங்களாக இந்த அம்புலன்ஸ் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்கள் மற்றும் ஊழியர்கள் வைத்தியசாலைக்குள் சென்று வருவதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே அம்புலன்ஸ் தரிப்பிடம் ஒன்றை அமைப்பதற்கு யாழ். சுகாதாரத் திணைக் களத்தினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

## வாசகருக்கு வந்த பதில்

### "பரீட்சை நேர சூசியை மாற்றி அமைப்பாளர்களா?"

தங்களது பத்திரிகையில் 04.09.2007 வாசகர் திருமுகம் பகுதியில் மேற்படி விடயம் தொடர்பாக பொதுக் கலைமாணி பகுதி - II - 2003 வெளிவாரி மாணவர்கள் எழு திய விடயம் தொடர்பாக எமது நிலைப்பாட்டினையும் வெளிப்படுத்தும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இம் மாணவர்கள் குறிப்பிட விடயம் எம்மை பெரும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியதுடன், எமது செயற்பாடுகளுக்கும் குந்தகம் விளைவிப்பதாகவும் உள்ளது. ஏனெனில், இவர்கள் குறிப்பிட்டிருக்கும் ''பொருளியல்'', ''அரசியல்'' பாடங்கள் எதுவும் ஒரே நாளில் காலை, மாலை நேர சூசியில் இடம்பெறவில்லை.

**இணைப்பாளர், வெளிவாரி பரீட்சைப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்**

குறிப்பு:

மேற்படி விடயம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவினைச் சேர்ந்த 10 மாணவர்கள் கையெழுத்திட்டு எமக்கு அனுப்பியிருந்த கடிதத்தையே மாணவர்களின் நன்மை கருதி வாசகர் திருமுகத்தில் பிரசுரித்திருந்தோம். ஒரு பிரதான பாடத்திற்கும் மற்றைய பிரதான பாடத்திற்கும் இடையில் ஒருநாளாவது இடைவெளி தரப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக இருந்துள்ளது. இதற்கு உதாரணமாக குறித்த ஒரு நாளில் காலையில் பொருளியலும் மாலையில் அரச அறிவியலும் நடைபெற விருப்பதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். ஆனால், வெளிவாரிப் பரீட்சைப் பிரிவு இணைப்பாளர் எமக்கு அனுப்பியுள்ள நேரசூசியின் படி பரீட்சை நடைபெறும் எந்தவொரு தினத்திலும் காலையில் பொருளியலும் மாலையில் அரச அறிவியலும் நடைபெறுவதாகக் காட்டப்படவில்லை.

மாணவர்கள் உதாரணமாக சுட்டிக்காட்டியிருக்கும் இருபாடங்கள் ஒரே நாளில் இடம்பெறவில்லையென்றபோதிலும், அவர்கள் பிரதான பாடங்கள் எனக் கருதும் வேறு சிலபாடங்கள் காலையிலும் மாலையிலுமாக நடை[illegible] உள்ளதை அவதானிக்க முடிகிறது.

## சண்டிலிப்பாயில் கால்நடை வளர்ப்போரின் விவரம் திரட்டப்படுகிறது

சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி பிரிவில் பண்ணையாளர்களும் பொது மக்களும் வளர்க்கும் ஆடுகள் மற்றும் மாடுகள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. கால்நடை வள அமைச்சு மற்றும் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் ஆகியன விடுத்திருந்த அறிவித்தலை அடுத்தே இந்த விவரங்கள் திரட்டும் பணி நடைபெறுவதாக சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி. அமுதா பிரபாகரன் தெரிவித்தார்.

நன்மைகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த விவரத் திரட்டு அவசியம் என்பதால் ஆடு, மாடுகளை வளர்ப்பவர்கள் உடனடியாக சண்டிலிப்பாய், டச் வீதியில் இயங்கி வரும் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான பதிவுகளை மேற்கொள்ள முடியும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-135)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# தேசிய விளையாட்டுப் போட்டிக்குச் செல்லும் மாணவர்களுக்கு இலவச போக்குவரத்து வசதி

எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் தேசியமட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவ, மாணவிகளுக்கு இலவச போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் இதை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய மட்டத்திலான பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை சென்று திரும்புவதற்கு இலவச பயண ஏற்பாடுகளைப் படையினர் செய்துள்ளனர். மூன்று கட்டமாக நடைபெறும் போட்டிகளில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களென 534 பேர் பங்குபற்றுகின்றனர்.

இவர்களில் முதல் கட்டமாக 199 மாணவர்களும் 47 ஆசிரியர்களும் செவ்வாய்க்கிழமை கப்பலில் பயணஞ்செய்தனர்.

யாழ். அரச அதிபரும் மேலதிக மாகாணப் பணிப்பாளரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் ஏற்பாட்டில் இலவச பயண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பயணமானவர்களுக்கு பய ணச் சீட்டுக்களையும் தொப்பி ஒன்றையும் மேஜர் ஜெனரல் சந்திரசிறி வழங்கி, தேநீர் உபசாரம் ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தார்.

மாணவர்கள் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு கப்பலிலும், அங்கிருந்து கொழும்புக்கு இராணுவ பஸ்களிலும் அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றுள்ளது. (1)

## நிகழ்வுகள்

வடமராட்சி, செப். 6

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்திவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை 'ஆற்றுப் படை பாடிய நக்கீரர்' என்னும் பொருளில் இணுவில் கந்தசுவாமி ஆலய இளந்தொண்டர் சபையின் ஸ்தாபக உறுப்பினர் மா.க. பரமேஸ்வரன் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (203-160)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

ஆத்மசோதி முத்தையாவின் குருபூசை நிகழ்வும் திருவாசக முற்றோதலும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஏழாலை ஆத்மசோதி தியான மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (203)

* * *

வலி. தென்மேற்கு, செப். 6

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் சித்தன்கேணி - வட்டுக்கோட்டை பிரதான வீதியிலுள்ள கழகத்தின் வட்டு - தொண்டைம் தொழிற் பயிற்சி நிலையத்தில் நடத்தி வரும் இலவச கணனி பயிற்சி நெறியின் 5ஆம் கட்டப் பயிற்சிநெறி நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதில் பயிற்சி பெறுவதற்காக இப்பிரதேசத்தை சேர்ந்த 32 இளைஞர் - யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 4 மாத கால பயிற்சி நடத்தப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (203-135)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் ஞாயிறுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(203-207)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கல்வி உயர்மட்ட செயற்பாடுகள் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கு வருகை தருவோர் கல்வி உயர்மட்டச் செயற்பாடு தொடர்பான முன்னேற்ற அறிக்கை, இவ்வருடத்திற்குரிய முன்மொழிவுகள் ஆகியவற்றையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

* * *

யாழ்ப்பாணம், செப். 6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் - 7 வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(203-207)

## உலக விசர்நாய்க்கடி தினம் - செப்.08ஆம் நாள்

### விலங்கு விசர் நாய்க்கடி நோயை இல்லாதொழிக்க...



- ★ விலங்கு ஒன்றினால் கடியுண்டால் உடனடியாக உரிய முதலுதவியின் பின் வைத்திய ஆலோசனையுடன் ஒழுங்கான சிகிச்சை பெறுங்கள்.
- ★ சந்தேகத்துக்கிடமான நாய்கள் தொடர்பில் அவதானமாக இருங்கள்.
- ★ வளர்ப்பு நாய்கள் தேவையற்று பெருகாமல் கருத்தடை சிகிச்சை செய்துகொள்ளலாம்.
- ★ நாய்க்குட்டிகளை பொது இடங்களில் விட்டு கட்டாக் காலியாக்காதீர்கள்.
- ★ உங்கள் பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் நாய்களைப் பதிவு செய்து பிறந்த மூன்றாம் மாதத்திலிருந்து வருடம் தோறும் ஏ.ஆர்.பி. மருந்து ஊசி ஏற்றுவித்தல்.
- ★ ஏற்புவலி தடை ஊசி வேறு ஏ. ஆர். பி. தடை ஊசி வேறு. வைத்தியரின் ஆலோசனையின் படி நடந்துகொள்ள வேண்டும்.
- ★ உங்கள் வளர்ப்பு நாய் உங்களின் நம்பிக்கையான ஒரு காவலாளி.

அது அருகில் வசிப்போருக்கு தொல்லையாக இருக்கக் கூடாது.
சமூகத்தில் நோய் பரப்பும் ஒன்றாகக் கூடாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 25 ஆம் ஆண்டு திருமண நாள் வாழ்த்து

06.09.2007



திரு.திருமதி பிரேமஜெகன் - யோகராணி
தம்பதியினர்

தரணியிலே தம்பதியினராகி
தவிராக்கி பிரகாசிக்கும்
அகலாக்கி - தாங்கள்
திரியும் திரவமுமாகி
எம்மை யெல்லாம்
ஒளிர்விக்கும் - எம்
அன்புத் தெய்வங்களுக்கு - எம்
மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

"வாழ்க நலமுடன் பல்லாண்டு"

மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி. (64513) பிள்ளைகள்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த பா.தனபாலன் - கர்னி தம்பதியரின் செல்வப் புதல்வி செல்வி த.அபிநயா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.09.2007) வியாழக்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, ஜேர்மன் பாட்டி, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, நர்மதன் அண்ணா, லக்சிகா அக்கா, மாமா, அத்தை, ஆர்த்திகா மச்சாள், ஆகீசன் மச்சான், கொழும்பு அருள்நேசன் சித்தப்பா, கௌரி சித்தி, அரிகரன் அண்ணா, லண்டன் பெரியமாமா, சின்னமாமா குடும்பத்தினர், கனடா பாட்டி, பெரியப்பா குடும்பத்தினர், டென்மார்க் மாமா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சிவபூதவராயர் மடத்துப்பிள்ளையார் அருள் கொண்டு பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

துவாரகை விதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (64511) தாத்தா, அம்மம்மா.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 16-11-1986 அன்னை அடியில் 24-07-2007

திதி : 06.09.2007

மலர் விரிந்து மணம் பரப்பும்
முன்பே
பூவைத் தட்டிப் பறிக்க மரண
தேவனுக்கு
மனம் வந்ததோ- பாசம்
நெஞ்சில் மோத
வெந்து வேகி உன் நினைவால்
வாடுது இங்கே இதயங்கள்
கபடமற்ற உன் புன்னகையை
காட்ட ஓடிவா கார்த்தி...

உன் பிரிவால் துயருறும்:
அம்மா- சந்திரலீலா,
அண்ணன்மார்- ஜெனதன், சாந்தன்,
கஜெேன், அண்ணி- வதனி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (64476)

செல்வி அரியராசா கார்த்திகா (கார்த்தி)

## கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

G.திருவருள்
KOBIRAJA TRANSPORT
தொ.பே. 0602213643, 0214591324
கந்தரோடை மேற்கு,(தம்பளை)
சுன்னாகம்.
தொ.பே. 0773638459 (64494)

## நல்லூருக்கு நடத்தப்படும் விசேட பஸ் சேவையில் கூடுதல் கட்டணம் அறவீடு

தென்மராட்சி பிரதேசத்திலிருந்து நல்லூருக்கு உற்சவ காலத்திற்கென விசேடமாக நடத்தப்படும் பஸ் சேவையில் கூடுதல் கட்டணம் அறவிடப்படுவதாக பயணிகள் முறையிடுகின்றனர்.

கொடிகாமத்திலிருந்து செம்மணி ஊடாகச் செல்லும் 811 மார்க்க பஸ் சேவையிலேயே பயணிகளிடமிருந்து கூடுதலான கட்டணம் அறவிடப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

செம்மணி ஊடாகச் செல்லும் பேருந்து நாயன்மார்க்கட்டு ஊடாக கல்வியங்காட்டுச் சந்திக்குச் செல்வதாகவும் தற்போது நல்லூர் முத்திரைச் சந்திக்குச் செல்வதற்குக் கூடுதல் கட்டணம் அறவிடுவதாகவும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(202-207)

## சாவகச்சேரியில் நாய்களுக்குத் தடுப்பூசி

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நடைபெறுகின்றது.

இதுவரை தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகளுடன் தொடர்பு கொண்டு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-207)

## கண்ணீர் அஞ்சலி

எமது விழி உள சமூக மேம்பாட்டு அமையத்தின் ஆலோசகரான
சுப்பிரமணியம் ஜீவசுதன்
அவர்களின் பாசமிகு மனைவி
திருமதி ஜீவசுதன் தமிழ்ப்பிரியா
அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இணைப்பாளர்கள், ஆலோசகர்கள், உத்தியோகத்தர்கள்,
(64515) விழி உள சமூக மேம்பாட்டு அமையம்,யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 ★ 01 ★ 1936



மறைவு 18 ★ 08 ★ 2006


அமரர் கந்தையா சின்னத்துரை
(ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜண்ட்)
திதி: தசமி

அன்பின் அப்பாவே!
பாசத்தை எமக்களூட்டி வளர்த்தவரே!
சிறகிழந்த பறவைபோல் எம்மைத் தவிக்கவிட்டு
விண்ணுலகு சென்றது ஏனப்பா....
ஆண்டுகள் பல சென்றாலும்
அழியாத நினைவுகளை நெஞ்சில் சுமந்து
காலமெல்லாம் உங்கள் நினைவோடே
எம்பணி தொடர்வோம்....

உங்கள் நினைவுகளுடன்:
தென்னிங்கவத்தை,
புலோலி மேற்கு. (64464) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 11ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 - 10 - 1972



மறைவு 06 - 09 - 1996

செல்வன் இரத்தினம் ஜெயன்
(யாழ்.பல்கலைக்கழக மாணவன்)

குடும்ப குலவிளக்காய் உதித்த
எங்கள்அன்புத் தெய்வமே!
வெள்ளை மனமும் புன்னகை வதனமும்
கூடி இருந்து குதூகலித்த நாட்களையும்
இனி எங்கு நாம் காண்போம்?
உம் கனவுகளை பாரினிலே சுவைக்குமுன்னே
அன்னையிடம் சென்றதேனோ?
மறக்க முடியாத நின் நினைவுகளோடு.....

'திரிபுரவாசம்',
கைதடி மேற்கு, கைதடி. (64481) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





| திருமதி அசோக்குமார் செல்வராணி | செல்வன் நிவானந்தன் அசோக்குமார் | செல்வி நிவாஜினி அசோக்குமார் |
|---|---|---|
| மலர்வு 10-05-1970 | மலர்வு 06-10-1992 | மலர்வு 13-12-1993 |

உதிர்வு:- 28-08-2005
திதி:தசமி (06-09-2007)

வேரறுந்த மரமாக எமைப்பிரிந்து
உன் பிள்ளைகளுடன் சென்றதெங்கே?
உடன் பிறப்பே உனையெண்ணித் தவிக்கின்றோம்
நாம் கண்ணீரால் தினமும் குளிக்கின்றோம் பார்க்காயோ?

"குருபரன் தொலைத் தொடர்பகம்",
பலாலி வீதி,
கைதடி.
தொ.பே. 021 226 3606 (64471)

உங்கள் பிரிவால் வாடித் தவிக்கும்:
சி.உமா
(அக்கா-பெரியம்மா),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் என்பது இங்கு சர்வதேசத்தை ஏமாற்றும் நகைச்சுவை நாடகம்

## அரியநேந்திரன் எம்.பி.கடுமையாக விமர்சனம்

"சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் ஒரு நகைச்சுவை நாடகம். அரசின் பக்கம் முழுப் பைத்தியக்காரர்களும், எதிர்த்தரப்பில் அரைப் பைத்தியக்காரர்களும் இருந்து கொண்டு நாட்டுமக்களையே பைத்தியக் காரர்களாக்கி வருகின்றனர்" - என மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.அரியநேந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விமர்சித்தார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றிவிட்டோம் என்று கூறிக்கொண்டு 'கிழக்கின் உதயம்' என அரசு தம்பட்டம் அடிக்கின்றது. ஆனால் அங்கே ஏற்பட்டிருப்பதோ 'கிழக்கின் அஸ்தமனம்' தான்.

கடந்த மூன்று மாதங்களுக்குள் கிழக்கில் எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர், பத்துப்பேர் காணாமற்போய்விட்டனர், 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர், இரண்டு பேர் விசாரணை என தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரச கட்டுப்பாட்டில் கிழக்கு இருக்கும் காலத்தில் அங்கு இடம்பெறும் இந்தச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்பேற்கவேண்டும்.

சீருடை அணிந்து திரிபவர்கள் மத்தியில் மக்கள் சுதந்திரமாக வாழமுடியவில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் சித்தப்பிரமை பிடித்தவர்கள் போன்று இருக்கின்றனர்.


நாடாளுமன்றிலிருந்து...

ஆனால், அரசு சர்வகட்சி மாநாடு என்று கூறிக்கொண்டு சர்வகட்சி கண்காட்சியை நடத்துகின்றது.

தலைமைப் பொறுப்பு அமைச்சர் திஸ்ஸ வித்தாரணவிடமிருந்து இப்போது பிரதமரின் கைக்கு மாறிவிட்டது. பிரதான நடிகர்களாக மேடையேற இப்போது நகைச்சுவை நடிகர்களாகிவிட்டனர்.

சமாதான முயற்சிகளைப் புலிகள் இழுத்தடிக்கின்றனர் என அரசு கூறுகின்றது. இது வேடிக்கையாக இருக்கின்றது.

ஐயா! முதலில் தென்பகுதி அரசியல் கட்சிகள் - குறிப்பாக ஆளும் தரப்பு ஆதரவாளர்கள்- ஒன்றுபட்டு ஒரு உடன்பாட்டுக்கு வாருங்கள் - என்று கூறினார் அரியநேத்திரன்.

# கோத்தபாய செயலாளரானதும் 15 புலிகள் சிறையிலிருந்து விடுவிப்பு

## ஒப்பந்தத்தின்படி நடந்ததாக கூறுகிறார் ஸ்ரீபதி



கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச் சின் செயலாளராகி ஆறு நாள்களில் சார்ள்ஸ் ஞானக்கோனும் மேலும் 15 புலிகளின் முக்கியஸ்தர்களும் விடுதலை செய்யப்பட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியாராய்ச்சி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற - அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான- விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

லக்ஷ்மன் கதிர்காமர் கொலைச் சந்தேக நபர்களான சார்ள்ஸ் ஞானக்கோனும், இன்னும் 15 புலி முக்கியஸ்தர்களும் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவியேற்று 6 நாள்களில் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த விடயத்தில் நீதிமன்றமும் தலையிடவில்லை. நீதிமன்றத்திற்குத் தெரியாமலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் கோத்தபாய ராஜபக்ஷவும் புலிகளும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

புலிகளுடன் ஒப்பந்தம் செய்ய கோத்தபாயவுடன் சேர்ந்து நானும் கிளிநொச்சிக்குச் சென்றவன் என்ற வகையில்- இந்த விடயம் பற்றி நன்றாகத் தெரிந்தவன் என்ற வகையில் நான் இதை உறுதியாகச் சொல்கிறேன்.

இந்த ஒப்பந்தம் ஜெனிவாப் பேச்சின் போது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் காரணமாகத் தான் இப்போது எமது நாடு அழிவை எதிர்கொள்கின்றது- என்றார் அவர். (சி)

# முசலியிலிருந்து இடம்பெயர்ந்தோரை உடன் மீளக்குடியமர்த்த வேண்டும்

## சபையில் வினோ எம்.பி. வேண்டுகோள்

படையினரின் தாக்குதல் நடவடிக்கை காரணமாக முசலிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோதராதலிங்கம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

மன்னாரில் படையினர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். எந்தவிதமான காரணங்களுமில்லாமல் படையினர் இந்தத் தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுத்திருக்கின்றனர்.

அநியாயமாக இந்தத் தாக்குதலை நடத்தி அப்பாவி மக்களைப் படையினர் இடம்பெயரச் செய்திருக்கின்றனர்.

இப்போது அகதி முகாம்களில் தங்கியிருக்கின்ற அகதிகளை அவர்களின் உறவினர்கள் சென்று பார்வையிட படையினர் அனுமதி மறுத்துள்ளனர். இடம்பெயர்ந்த இந்த மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (சி)

## பெருந்திருவிழா பக்திப்பாக்கள்



மலர்மிசை யோனும் மாலுங் காணா
அலகிலா ஆடலுடைய அப்பன்
மலர்தலை உலகந்து மானுடன் போல
நலமிகு நல்லூரில் நாடி ஆட் கொண்டான்.
- யோகர் சுவாமிகள்

### கைலாச வாகனே தமிழினத்தைக் காக்க வா!

கைலாச வாகனாய் வரவேண்டும் - முருகா
கண்ணீர் வாழ்வதனை ஒழித்திட வேண்டும்
மையிலுடன் நீ மயிலேறி வரவேண்டும்
மாண்போடு தமிழினத்தைக் காத்திடவேண்டும்.
- அ.கலாநிதி .

### துயரங்கள் தீர்க்கும் சுவாமிநாதன்

செந்தமிழ் முருகனை
சேவற் கொடியோனை
தேடியே சென்றிடுவோம் - நல்லூர்
தேடியே சென்றிடுவோம்!
கந்தக் கனியான
கனக வடிவேலை
கனிந்து பணிந்திடுவோம் - நெஞ்சம்
கனிந்து பணிந்திடுவோம்!
சஞ்சலம் தீர்த்திடும்
சுவாமி நாதனவன்
துயரங்கள் போக்கிடுவான் - எங்கள்
துயரங்கள் போக்கிடுவான்!
- *அரியாலையூர் சி.சிவதாசன்.*

### நல்லைப்பதி நாயகனே! நலம் பொழிவாய்!

நல்லைப்பதி நாயகனின் நற்பதம் பணிந்தோம்
நல்லன நல்கி நலம் பொழிவாய்!
அல்லும் பகலுமுன் அருளடி ஆராதித்தோம்
அமைதி நிலைகொள்ள அறுமுகனே அருள்வாய்!
வல்வினைகள் வலுவிழக்க வளநல்லை வந்துனது
வடிவேலை வந்தித்தோம் வாயாரப் பாடுகின்றோம்
பல்லோரும் பணிந்திடும் பதிநல்லைக் குமரனே!
பாரோங்கிச் சமாதானம் பொலிந்திட வரமருள்வாய்!
- *தேவமதுரம்* சுகிர்நாகேந்திரா.

# தமிழ்க் கைதிகள் மீது பூஸாவில் சித்திரவதை!

## மகேஸ்வரன் எம்.பி. வேதனை



"பூஸா முகாமில் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள், சக சிங்களக் கைதிகளாலும், சிறை அதிகாரிகளாலும் தாக்கப்படுகின்றனர். பூஸாச் சிறைச்சாலை இன்று ஒரு சித்திரவதைக் கூடமாகி உள்ளது.

-இப்படி ஐ.தே.க. கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

அங்கே அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு முறையான வசதிகள் இல்லை. சரியான உணவும் இல்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே, இவர்கள் உடனடியாக நீதிமன்றின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும்."

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், தென்பகுதியில் உள்ள சிறைச் சாலைகளிலும், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவிலும், நான்காம் மாடியிலும் தமிழர்கள் வகை தொகையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் என்ன குற்றம் செய்தனர்? தமிழர்களாகப் பிறந்தது குற்றமா?

அரசு அவசரகாலச் சட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு தமிழ் மக்களைப் பெரிதும் துன்பப்படுத்திவருகின்றது.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் பொலிஸாருக்கும் படையினருக்கும் வழங்கப்பட்டுள்ள கூடுதலான அதிகாரங்கள் வாபஸ் பெறப்படவேண்டும்.

இக்குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களை அரசு விடுதலை செய்யப்போவதாகக் கூறப்படுகின்றது. உண்மை நிலையைப் பிரதமர் வெளிப்படுத்த வேண்டும்- என மகேஸ்வரன் எம்.பி. கேட்டுக்கொண்டார். (சி)

## *மல்லாகத்தில் இரத்ததான முகாம்*

வலி.வடக்கு,செப்.6

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 14ஆவது வலயத்தின் கீழ் உள்ள மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம், மல்லாகம் - தெல்லிப்பளை லயன்ஸ் கழகம் என்பன இணைந்து மல்லாகம் பங்கு அருட்தந்தை கஸ்போவர் மற்றும் மல்லாகம் சதா சகாய மாதா இளைஞர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இரத்ததான முகாம் ஒன்றை மல்லாகத்தில் நடத்தினர்.

மல்லாகம் சதா சகாய மாதா ஆலய வளாகத்தில் இடம்பெற்ற இம்முகாமில் மல்லாகம் பங்கு மக்கள் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியின் நடமாடும் பிரிவினர் இம்முகாமில் சேவையாற்றினர். (202-86)



குருதிக்கொடையாளர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்: [illegible])

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் இருபதாம் நாளான இன்று வியாழக்கிழமை 'பாவையர் வழிபாட்டில் பத்தினி' என்னும் தலைப்பில் சைவப்புலவர் நித்தியதசீதரன் சொற்பொழிவாற்றுவார். தெல்லிப்பழை துர்க்கையம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

## பொன்னாலை வரதராஜர் ஆலய தேர்த்திருவிழா பக்திபூர்வமாக நடைபெற்றது

யாழ்ப்பாணம்,செப்.6

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

பெருமளவான பக்தர்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக காவடி, தூக்குக் காவடிபோன்றவற்றை எடுத்து வந்திருந்தனர். யாழ்.மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இருந்து பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

காவடிகள் ஆலயத்திற்குச் செல்ல கடற்படையினிடம் முதலிலேயே அனுமதி எடுக்கப்படவில்லை. இதனால் அவை உடனடியாக ஆலயத்திற்குச் செல்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. (203)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

சதாசிவம் பிரபாகரன் என்பவருடைய தங்கநகை (கைச் சங்கிலி) ஒன்று அச்சுவேலியில் இருந்து நெல்லியடி ஊடாக கரவெட்டிக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தம்பாலை, அச்சுவேலி (0776136334) என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்).

## கண்ணீர் அஞ்சலி



**செல்வி றெக்சலா ஜோசப்**

(தரம் 10 B)

04.09.2007 அன்று திடீர் மரணமடைந்த எம் பாடசாலை மாணவியின் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இவரது ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.
(64522)

## மகளிர்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் ஒன்றிணைந்த கூட்டுறவு மகளிர் கல்வித்திட்டத்தின் கீழ் பின்வரும் பயிற்சிகள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

1. மனைப்பொருளியல் டிப்ளோமா (9 மாதம்)
2. மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி (6மாதம்)
3. தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி (4மாதம்)
4. சுயமுயற்சி பயிற்சி (2 மாதம்)
5. உள்ளூர், நவீன உணவுவகைகள் தயாரித்தல் பயிற்சி (ஒரு மாதம்)

*மற்றும்*

Facial, Fondan Icing & Sugar Graft,
New Fashion hair Styles & Bridel Make Up

விண்ணப்ப முடிவு திகதி: 15.09.2007

விவரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் சபையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத் தொகுதி,
2 ஆம் மாடி, 12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(453571)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 10.07.1937

உதிர்வு 07.08.2007

**திருமதி சிதம்பரப்பிள்ளை இராசலட்சுமி**

மின்னாமல் முழங்காமல் சொல்லாமல்
எங்கு சென்றாய் அம்மா!
உன் பிரிவுத் துயர்
தாங்க முடியவில்லையே அம்மா!
இனி எப்போது நாம் உன்
முகத்தைக் காண்போம் அம்மா!

எங்கு கேட்போம் உன்
குரலை எங்கள் மாமியே!
எங்களை ஏமாற்றி விட்டு
தனிமையில் வாழ புறப்பட்டீரே அம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும், மற்றும் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி. (64526)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## விற்பனைக்கு

பண்ணைக்கும் வீட்டு வளர்ப்பிற்கும் உகந்த நல்ல இன JC, பிறிசியன் பால் தரும் மாடுகளும், நிறைமாத சினையுடைய சிந்து இன மாடும் விற்பனைக்கு உண்டு. (64521)

தொடர்பு: No: 26, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (கொம்பியூட்டர் பயிற்சி நிலையம் முன்பாக)


## Certified Computer Accountant

A/L 2007வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான விசேட பிரிவுகள்

Tally Software-Accredited by The Institute of Chartered Accountant's of England & Wales

Mega Offer

Tally

காலம்:-3-4 மாதம்

Only one Authorized Tally Academy in Jaffna

CSC COMPUTER EDUCATION
ISO 9000:2001 Certified Institution

101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி
(மக்கள் வங்கிக்கு மேலாக)
யாழ்ப்பாணம்.
Tel :021-222-8196

## மெகா

A/L 2007பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் கணனி உயர் கல்வியில் ஆர்வம் உடைய அனைவருக்கும் ASIAN-CSC வழங்கும் கணனிக் கற்கை நெறிகளிற்கான மாபெரும் புலமைப்பரிசில்

75% வரை வெல்லுங்கள்

பரீட்சை அனுமதி இலவசம்

ASIAN-CSC COMPUTERS

பரீட்சை பற்றிய மேலதிக விபரங்களுக்கு

யாழ்ப்பாணம் ASIAN-No-2G, ஸ்ரான்லி வீதி, Tel :021-222-5677

நெல்லியடி ASIAN-கொடிகாமம் றோட், Tel :077-3122198

யாழ்ப்பாணம் CSC (INTERNATIONAL DIVISION) No-101,2ம் மாடி, ஸ்ரான்லி வீதி (மக்கள் வங்கிக்கு மேலாக)Tel :021-222-8196


## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான மாதாந்த கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு மாகாண சபையின் யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் யாழ். மாவட்ட சமூக சேவைகள் பதில் அலுவலர் அ.ஞானவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-75)

### அகழப்பட்ட வீதி புனரமைக்கப்படவில்லை

மிதிவெடிகளை கண்டு பிடித்து அகற்றுவதற்காக மண் அகழப்பட்ட சிறுவிளானிலுள்ள ஞானோதய வீதி பலமாத காலமாகியும் புனரமைக்கப்படவில்லை என்று இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மழைகாலங்களில் சேறும் சகதியுமாக இருந்து வரும் இந்த வீதியால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாது குறுக்கு வழிகளால் தமது வீடுகளுக்கு சென்று வருகின்றனர்.

இவ் வீதியிலுள்ள மண் அகழப்பட்டு மிதிவெடிகள் எடுக்கப்பட்டு பலமாத காலம் கடந்து விட்டது. தற்போது மிதிவெடி அபாயம் நீக்கி விட்ட போதிலும் இவ் வீதி புனரமைப்பு செய்யப்படாது இருந்து வருவதாக இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்வீதியை விரைவில் புனரமைப்பு செய்து தருமாறு வலி. தென்மேற்கு பிரதேச சபையிடம் இப் பகுதி மக்கள் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (203- 135)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் சுப்பிரமணியம் ஜீவசுதன்
அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி ஜீவசுதன் தமிழ்ப்பிரியா**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதோடு அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபத்தைப் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**95/96 சமூகவியல் B அணி நண்பர்கள், யாழ்ப்பாணம்.** (64508)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **கெங்காதரன் காங்கேசன்**

(ஆட்டிஸ்ற்)

தோற்றம் 01.03.1947 — மறைவு 18.08.2006

திதி:06.09.2007 வியாழக்கிழமை

இல்லத்தின் வேராக நின்று எமக்காக உழைத்தவரே
ஆலம் விழுதுபோல உறவுகள் ஆயிரம் இருப்பினும்
அப்பா என்றழைக்க உறவில்லாமல் எம்மை பரிதவிக்க விட்டதேனோ
எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனாலும் ஏற்றிய தீபமாய் எம் நெஞ்சில் வீற்றிருக்கும்...
ஆறாது எம்துயர் அழியாத உங்கள் நினைவுகள்
வேகமாய் எமைவிட்டு விரைந்துதான் சென்றதெங்கே?
பழுதற்றார் பாரில் மறைந்தாலும்
தொழுது அவர் தொண்டு பாராட்டல் நமது கடன் நல்லோர் கடன்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

215/2,கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(64467)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 01 . 10 . 1936



இறப்பு 07 . 08 . 2007

**திருமதி சகுந்தலா நரேந்திரா**

07.08.2007 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (06.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம். எமது சகோதரியின் மறைவையொட்டி இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தந்தி, தபால் மூலமும் எமது துயரில் பங்கு பற்றிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

71A/1, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை. (64474)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**கனகரத்தினம் மகாலிங்கம்**

(முன்னாள் சிறாப்பர்,சுங்கத் திணைக்களம், பளை)

மிருசுவில் விடத்தற்பளையை பிறப்பிடமாகவும் பளையை வாழ்விடமாகவும் கொண்ட கனகரத்தினம் மகாலிங்கம் 02.09.2007 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - தெய்வானை தம்பதியரின் அருமை மருமகனும் மலர் மகாலிங்கத்தின் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை) அன்புக்கணவரும் சாந்தீபன், அகல்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சன், அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும் அழகானந்தம் தம்பதியர் (கோப்பாய்) மற்றும் டாக்டர் ஆறுமுகம் (மிருசுவில் வைத்தியசாலை), சாரதாதேவி (ஓய்வுபெற்ற மருந்தாளர்) தம்பதியரது சம்பந்தியும் கமலாம்பிகை (முன்னாள் உபதபால் அதிபர், விடத்தற்பளை),சிவபாக்கியம் (முன்னாள் மருந்தாளர், தேசியவைத்தியசாலை, கொழும்பு),தங்கேஸ்வரி (ஓய்வுபெற்ற வருமானவரி உத்தியோகத்தர்- கொழும்பு),ஞானேஸ்வரி (முன்னாள் லிகிதர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்),சாந்தநாயகி (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலை), சச்சிதானந்தசிவம், விஜயகுமாரி (முன்னாள் ஆசிரியர், முழங்காவில் ம.வி.), காசிநாதன், ருக்மணி ஆகியோரது அன்பு அண்ணாவும் குணரத்தினம் (இளைப்பாறிய உபதபாலதிபர், கனகராயன் குளம்), கதிர்காமநாதன், நவயோகராசா (மீன்பிடித் திணைக்களம், யாழ்ப்பாணம்), தயாபரி, சிவானந்தம், சியாமளா, பாலசுப்பிரமணியம் ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆதர்சனின் அன்பு பேரனும் குணரூபன் (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், பிராந்திய ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), குணதர்சனா (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), குணவித்யா (உள்ளக பயிற்சி மருந்தாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), நக்கீரன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்), நிருத்திகா, நிரூபிகா, அபிசாந், வைஸ்ணவி, அபிநயா, நிலாஜினி, கேயூரன், தருணீசன், சிஹானா, கஜனன் ஆகியோரின் அன்பு தாய்மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2007) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி இல.
0112507867 (64528)

தகவல்;
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமைகளை இங்கு பேண சர்வதேச அவதானிப்பு அவசியம்

*"இலங்கையில் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் இழைக்கப்பட்டு வரும் தவறுகள் மற்றும் செயற்றிறனின்மை போன்றவை குறித்து ஊன்றிக் கவனிக்கும்படி இலங்கை அரசை வற்புறுத்துங்கள்"*

- இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் பிரிட்டனைத் தளமாகக்கொண்டு இயங்கும் - முக்கிய சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான - சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருக்கின்றது.

இன்னும் நான்கு நாள்களில் - அடுத்த திங்கட்கிழமை - ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆறாவது அமர்வு ஆரம்பமாகி சுமார் 18 நாள்கள் நீடிக்க இருக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்து பிரதிநிதிகளும் இலங்கையில் மனித உரிமைகள் சீர்கெட்டு வரும் நிலைமை குறித்து கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மன்னிப்புச் சபை கோரியிருக்கின்றது.

மன்னிப்புச் சபை இலங்கை நிலைமை குறித்து சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் முக்கியமானவை. சகல தரப்பினராலும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

வடக்கு, கிழக்கில் மக்களைப் பாதுகாக்க முடியாத நிலைமை குறித்து மன்னிப்புச்சபை விசேடமாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது. மக்கள் யுத்தத்தில் இடையில் சிக்குகிறார்கள் என்பதை விட, வேண்டுமென்றே இலக்கு வைக்கப்படுகின்றார்கள் என்பதே உண்மை என்றும் அம்பலப்படுத்தியிருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை.

மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ள பின்வரும் விடயங்கள் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் நிச்சயம் - விரிவாக - அக்கு வேறு ஆணி வேறாக - ஆராயப்படும் என எதிர்பார்க்கலாம்.

*✱ அரசுப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் குழுக்களினால் சிறுவர்கள் வல்வந்தமாக யுத்தத்துக்குத் திரட்டப்படுகின்றார்கள்.*

*✱ ஆள்கடத்தல்கள், கடத்திக் கப்பம் பெறுதல், வல்வந்தமாகக் கடத்திக் காணாமற் போகச்செய்தல் என்பன தொடர்கின்றன.*

*✱ இடம்பெயர்ந்த பல லட்சம் அகதிகள் பீதியில், வாழ்வாதாரங்களின்றி வசிக்கும் நிலைமை தொடர்கின்றது.*

*✱ மனிதாபிமானத் தொண்டுப் பணியாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத கெடுபிடி - இக்கட்டு - நிலைமை நீடிக்கின்றது.*

*✱ பத்திரிகையாளர்கள் தாக்கப்படுகின்றார்கள். அச்சுறுத்தப்படுகின்றனர். இச் சம்பவங்களோடு அரசுப் படைகளுக்குத் தொடர்பு இருப்பது போலத் தோற்றுகின்றது.*

*✱ கருத்து வெளியிடும் சுதந்திரம் நசுக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்ட விதிகள் இதற்கு நன்கு உதவுகின்றன.*

*✱ அவசரகாலச் சட்ட விதிகளின் வாசகங்கள் தெளிவின்மையால் அவை மூலம் ஊடகச் செய்தியிடல் நடவடிக்கையையே கிரிமினல் குற்றமாக்கும் வாய்ப்புள்ளது.*

*✱ அவசரகால சட்ட விதிகள், தமிழர்களை இனப்பாகுபாட்டுக்கு உள்ளாக்கும் விதத்தில் அவர்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன.*

*✱ குற்றம் புரிவோரை சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களித்துப் பாதுகாக்கும் மோசமான நடைமுறை இலங்கையில் கைக்கொள்ளப்படுவது குறித்து தொடர்ந்தும் முறைப்பாடு செய்யப்பட்டு வருகின்றது.*

*✱ சில முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்களை ஆராய அரசு நியமித்துள்ள ஆணைக்குழுவும் சரி, அந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டைக் கண்காணிக்க ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட அவதானிகள் குழுவும் சரி செயற்றிறனுடன் செயல்பட முடியாத நிலையே உள்ளது.*

*✱ தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் பயனுள்ள முறையில் செயற்படுவதற்கு உரிய வளம் கொண்டதாக இல்லை.*

- இவ்வளவு விடயத்தையும் சுட்டிக்காட்டியுள்ள மன்னிப்புச் சபை இலங்கையில் சர்வதேச மனித உரிமைகளும் சட்டங்களும் மீறப்படுவதை, இலங்கையில் நேரடியாகப் பிரசன்னமாகி இருந்து, கண்காணித்து, விசாரித்து நடவடிக்கை எடுக்க - சுயாதீனமான - சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு முறைமை இருக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளது. அத்தகைய முறைமையை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான அழைப்பை விடுக்குமாறு இலங்கையை வற்புறுத்தும்படியும் மன்னிப்புச் சபை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டிருக்கின்றது.

அதாவது இலங்கையில் சுயாதீனமாக இயங்கும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புப் பொறிமுறை ஒன்றுக்கு அனுமதிக்கும்படி இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் இதையே வற்புறுத்தியிருந்தார்.

மனித உரிமை மீறல்களுக்கான குற்றச்சாட்டுகள் அதிகளவில் இலங்கையின் தற்போதைய அரசு மீது சுமத்தப்படுகையில், அவை பற்றிக் கண்காணிக்க அரசுக்குப் புறம்பான சர்வதேச அமைப்புத் தேவை என்று மன்னிப்புச் சபை வற்புறுத்துவதில் என்ன தவறு இருக்க முடியும்?

# தாக்குதல் திட்டத்தை முன்னெடுக்காமல் தீர்வுத் திட்டத்தை முன்வையுங்கள்!

## கோத்தபாய - பஸில் குழுவிடம் புதுடில்லி வற்புறுத்தல்

புதுடில்லி, செப்.6

வடபகுதியை முற்றாகக் கைப்பற்றும் பாரிய இராணுவ நடவடிக்கை அடங்கிய தாக்குதல் திட்டத்தை முன்னெடுக்காமல், அமைதித் தீர்வுக்கான தென்னிலங்கையின் அரசியல் திட்டத்தை முன்வையுங்கள்!

- இப்படி புதுடில்லிக்கு விஜயம் செய்திருக்கும் இலங்கை அரசின் உயர்மட்டக் குழுவிடம் இந்திய அரசுத் தலைமை வற்புறுத்தித் தெரிவித்திருப்பதாக புதுடில்லி வட்டாரங்கள் மூலம் அறியவருகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டு சகோதரர்களான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அடங்கிய இலங்கை அரசின் உயர்மட்டக் குழு கடந்த ஞாயிறன்று புதுடில்லி சென்றது.

அக்குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் உட்பட இந்திய அரசின் மூத்த அதிகாரிகளோடு பல சுற்றுப் பேச்சுகளில் ஈடுபட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பிலிருந்து புதுடில்லி சென்றிருக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தும் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்புகளின்போதே இந்தியத் தரப்பின் நிலைப்பாடு கொழும்பு அரசின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வடக்கின் மீது பெரும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுக்கும் திட்டம் ஒன்று கொழும்பிடம் இருப்பது பற்றிய தகவல் இந்தச் சந்திப்புகளின்போது இந்தியத் தரப்புக்குக் கோடி காட்டப்பட்டதாகவும் -

அந்த யோசனையை புதுடில்லி கடுமையாக ஆட்சேபித்ததாகவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் பெரும் இராணுவத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டால் மீண்டும் தமிழகத்துக்கு பெருமளவில் தமிழ் அகதிகள் வந்து குவிவர். அத்துடன் தமிழக அரசியலில் பெரும் குழப்ப நிலையையும் அத்தகைய தாக்குதல் திட்டம் ஏற்படுத்தும். ஆகவே, தாக்குதல் திட்டத்தை விடுத்து, தீர்வு யோசனைத் திட்டத்தை உடன் முன்வைத்து, அதன் அடிப்படையில் அமைதி முயற்சிகளை விரைந்து ஆரம்பிக்கக் கொழும்பு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் புதுடில்லி வலியுறுத்தியது எனக் கூறப்பட்டது.

### இந்தியாவும் இசைவற்றது என திட்டவட்டமாகத் தெரிவிப்பு

தீர்வு யோசனை, வடக்கு - கிழக்கு இணைப்பு ஆகியன சம்பந்தமாக புதுடில்லித் தலைமைக்கு கொழும்பு அரசு முன்னர் வழங்கியவை எனக்கூறப்படும் உறுதி மொழிகளும் இந்தச் சந்திப்பின்போது நினைவூட்டப்பட்டன என்றும் -

இவ்விடயங்களில் கொழும்பு அரசின் காத்திரமான நடவடிக்கைக்கு புதுடில்லி காத்திருக்கின்றது என்பது கொழும்புக்கு இச்சந்திப்புகளின்போது தெரியப்படுத்தப்பட்டது என்றும் - மேலும் கூறப்பட்டது.

மொத்தத்தில் இலங்கை அரசின் உத்தேச தாக்குதல் திட்டம் தனக்கு இசைவற்றது என்பதை இந்தச் சந்திப்புகளின்போது இந்தியா கொழும்புக்குத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திவிட்டது எனவும் தெரியவருகிறது.

இதேசமயம், ஈழத் தமிழர்களுக்கான உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு படகில் தமிழகத்தில் இருந்து இலங்கையின் வடபுலத்துக்கு இம்மாத நாடுப்பகுதியில் தாம் புறப்பட்டுச் செல்லப் போகிறார் என தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் ப.நெடுமாறன் கூறிவருகின்ற விடயமும் இலங்கை உயர்மட்டக் குழுவின் புதுடில்லி விஜயத்தின்போது விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

### தமிழகத்துக்கு விரைகின்றார் நாராயணன்

இந்த விவகாரத்தில சர்ச்சைகள் ஏற்படாம தவிர்க்கும் நோக்கில் - நெடுமாறனின் முயற்சியைத் தடுக்கும் திட்டத்தில் - பிரதமர் மன்மோகன சிங்கின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் இவ்வார இறுதியில் தமிழகம் விரைகின்றார் என்றும் -

அவர் இவ்விடயம் குறித்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியுடன் பேசி, அவர் மூலமாக நெடுமாறனின் முயற்சியைத் திசை திருப்ப நடவடிக்கை எடுப்பார் என்றும் - சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(சி)

# உயிர் அச்சுறுத்தல் காரணமாக நேற்றும் நால்வர் சரண் அடைந்தனர்

யாழ்ப்பாணம்,செப். 6

தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து நான்கு இளைஞர்கள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

மீசாலையைச் சேர்ந்த ஓர் இளைஞரும் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களுமே இவ்வாறு சரணடைந்துள்ளனர்.

இனந்தெரியாதோரின் அச்சுறுத்தல் காரணமாகவே தாம் சரணடைந்துள்ளதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நான்கு இளைஞர்களையும் பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

கடந்த சில தினங்களாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்த ஏழு பேர் யாழ்.பொலிஸாரால் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

யாழ்.சிறைச்சாலையில் நீதிமன்றப் பாதுகாப்பில் அவர்களை வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-50)

# திருமலை - முல்லைத்தீவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### தமிழர்களுக்கு பாதிப்பு

அங்கு நிர்வாக மாற்றத்தை ஏற்படுத்தவும் முரண்பாட்டை நீடிக்கச் செய்யவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இதனால் ஒட்டுமொத்தத் தமிழர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழரின் நலன்களுக்காக அரசு சிறிதளவேனும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதனால் தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் சிறுபான்மை இன மக்களின் நலனைச் சிதைத்து பெரும்பான்மை இன மக்களின் நலனை மேம்படுத்தும் அரசின் நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கை மீள இணைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும. இடம்பெயர்ந்த தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த வேண்டும்.

கிழக்கில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை தர்மத்தை மீறிச் செல்கின்றது. இதனால் 3 லட்சம் தமிழர்கள் கிழக்கில் இடம்பெயர்ந்துள்ளனர்.

### வாகரையில் 300 தமிழர்கள் கொல்லப்பட்டனர்

ஜனாதிபதி பெப்ரவரி மாதம் வாகரைக்குச் சென்றார். அங்கு அவர் "வாகரையில் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மக்களைப் படையினர் மீட்டுள்ளனர், எந்த மக்களுக்கும் சேதமேற்படவில்லை, அதற்கு நான் படையினருக்கு நன்றி கூறவே இங்கு வந்துள்ளேன்" - என்றார்.

அது பிழை. முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் வாகரை நோக்கிய படை நகர்வில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது தொழில்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கிழக்கின் படை நடவடிக்கை பல தரப்பட்ட வகையில் தமிழ் மக்களின் வாழ்வையும் வாழ்வாதாரங்களையும் பாதித்துள்ளது. இப்போது கிழக்கில் பாரிய அபிவிருத்தியை அரசு மேற்கொள்வதுபோல் காட்டிக்கொள்கிறது. ஆனால், அப்படியான திட்டங்கள் எவையும் அங்கு முன்னெடுக்கப்படவில்லை.

அரசு தனது சொந்த வேலைத்திட்டத்தின் கீழ் மூதூரில் உயர் பாதுகாப்பு வலயம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி மிகவும் மோசமாகச் செயற்பட்டு வருகிறது.

பெரும்பான்மைத் தமிழரைப் பாதிக்க வைத்து சிங்களவர்களைத் திருமலையில் பெரும்பான்மையாக்கவே அரசு முனைகிறது. இது வெற்றியளிக்காது. நாம் அதற்கு இடமளிக்க மாட்டோம்.

கிழக்கில் இளைஞர்களை எதிர்காலப் பயங்கரவாதிகளாக மாற்ற அரசு அடித்தளமிட்டுள்ளது. தமிழர்களின் ஆயுதப் போராட்டம் நியாயம் என்று ஏற்கக்கூடிய யதார்த்தத்திற்கு எதிர்காலத்தில் இந்த அரசு வரும்.

### புத்தர் இன்று இருந்தால் இதை அனுமதிக்கமாட்டார்

மூதூர், சம்பூர் போன்ற இடங்களில் புலிகள் பின்வாங்கிய சம்பவத்தை மக்களைக் காப்பாற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்று அரசு சொல்கிறது.

சம்பூருக்கு மக்கள் திரும்பச் சென்றால் அவர்களைப் புலிகள் கொல்வார்கள். அதனால் மக்கள் அங்கு போகக் கூடாது என்பதுபோல் அரசின் கூற்றும் செயற்பாடும் உள்ளன.

வான் தாக்குதல்களால் இடம்பெயர்ந்த மூன்று லட்சம் மக்களும் பயங்கரவாதிகள் அல்லர். புத்தபிரான் இப்போது இருந்திருந்தால் இந்த அநியாயத்தை ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார். அவர்கள் எல்லோரும் அப்பாவி மக்கள்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 21 | வெள்ளிக்கிழமை 07.09.2007 |
| திதி : ஏகாதசி | முன்னிரவு 06.27 |
| நட்சத்திரம் : | புனர்பூசம் மு.இ. 08.42 |
| சுபநேரம் | : 06.04 - 07.34 |
| ராகுகாலம் | : 10.34 - 12.04 |

## யாத்திரையில் தங்கும் மடங்கள் இல்லை

கடவுளை நெருங்குவதற்கு நீங்கள் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும் கடவுள் உங்களை நோக்கிப் பத்து அடி வைக்கிறார்.

இந்த யாத்திரையில் தங்கும்மடங்கள் இல்லை. நாளிலும் பொழுதிலும், அழுகையிலும் ஆனந்தத்திலும், இறப்பிலும் பிறப்பிலும், மாதாவின் மடியிலும் மரணத்தின் முடிவிலும் நடைபெறும் தொடர்ந்த யாத்திரை. பாதை முடிந்ததும் இலக்கை அடைந்ததும் தன்னிலிருந்து தனக்கே பிரயாணம் செய்ததை யாத்திரீகன் உணர்கின்றான். அந்த நீண்ட ஏகாந்தமான பாதையில் தன்னை வழிநடத்திச் சென்ற கடவுள் எப்பொழுதும் தன்னைச்சுற்றி, தன்னுடன், தன்பக்கத்தில் தன்னுள்ளேயே இருந்ததை உணர்கின்றான். அவன் அவனுடைய உண்மைத் தன்மை எப்போதும் அவனோடு தெய்வீகமாய் இருக்கிறது.

சாயிபாபா



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் கிழக்கில் மேற்கொள்ளப்படமாட்டாது

## நாடாளுமன்றில் அமைச்சர் கரு உறுதியளிப்பு

கொழும்பு, செப்.6

கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றம் ஒருபோதும் ஏற்படுத்தப்படமாட்டாது. காலம் காலமாக வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டு பௌத்த மயமாக்கப்படமாட்டாது. எனவே, கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்கள் பீதியடைய வேண்டிய அவசியம் இல்லை. அனைத்து இன மக்களும் கௌரவத்துடன் வாழும் நிலை உருவாக்கப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜயசூரிய உறுதியளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாண நிலைவரங்கள் தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் விசேட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது துப்பாக்கி வேட்டுகளின் ஓசைகள் ஓய்ந்துவிட்டன. அங்கு வாழும் மக்கள் இப்பொழுது அமைதியான வாழ்க்கை வேண்டி பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

கிழக்கை அரச படைகள் கைப்பற்றிய பின், நான் நேரடியாக அங்கு சென்று மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தவர்கள் மற்றும் பொதுமக்களைச் சந்தித்து குறைகளைக் கண்டு அறியமுடிந்தது.

அங்கு ஏற்பட்டுள்ள அவலங்களை சம்பந்தன் எம்.பி. இங்கு தெளிவாகக் கூறினார். இவ்வாறான நிலை ஏற்பட்டதற்கு யார் காரணம் என்று தேடி அலைவதிலும் பிரேத பரிசோதனை செய்வதிலும் பிரயோசனம் இல்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படவேண்டும். இராணுவப் பீதி நீங்க, முற்றும் முழுதான சிவில் நிர்வாக சேவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள 45 பிரதேச செயலகங்களும் மீளமைக்கப்பட்டுள்ளன. அங்கு கடமையாற்ற போதிய தமிழ் பேசும் அதிகாரிகள் இல்லை. எனவே, தற்காலிக அடிப்படையில் நியமனங்களை வழங்கும்படி அரச அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். - என்றார்.

## சமுர்த்தி நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 6

சமுர்த்தி பயனாளிகளுக்கான ஜூன், ஜூலை மாதங்களுக்கான நிவாரண விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு ப.நோ. கூ. சங்கங்களை அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த விநியோகத்தில் அரிசி, மா, சீனி ஆகிய பொருள்களை வழங்கும்படியும் சீனி, கோதுமை மா ஆகியவற்றுக்கான வழங்கற் கட்டளையை இன்று முதல் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படியும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

கையிருப்பில் உள்ள அரிசியை இந்த நிவாரண விநியோகத்துக்கு பயன்படுத்துமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

## சிலாவத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலாவத்துறையானது மதவாச்சி - மன்னார் வீதிக்கு தெற்காக உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம். அரசியல் லாபத்துக்காகவும் மக்களை தவறாக வழி நடத்தவும் சிறிலங்கா அரசாங்கம் எதனையும் செய்யும் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்த சிறிலங்கா இராணுவமே மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்து விட்டன. வில்பத்து அல்லது வேறு ஒரு காட்டுப்பகுதியில் கூட, சிறிலங்கா அரசாங்கம் அந்நாட்டுத் தேசியக் கொடியை ஏற்றிவிட்டு விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதிகளை மீட்டுவிட்டோம் என்று கூறுவார்கள் - என்றார். (அ)

# தெஹிவளைக் கடற்கரையில் வெடிப் பொருள்கள் மீட்பு

கொழும்பு, செப்.6

கொழும்பு, தெஹிவளை பிறேஸர் அவெனியூவுக்கு அருகிலுள்ள ரயில் கடவைக்கும், கடற்கரையை அண்டிய புல்தரைக்கும் இடையில் நேற்றுக்காலை 9.40 மணியளவில் 7 கிலோகிராம் எடையுடைய அதிசக்தி வாய்ந்த ரி-4 ரக வெடிபொருள்கள் அடங்கிய 14 பொதிகளைப் பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

அப்பகுதிப் பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே இந்த வெடிபொருள்கள் தெஹிவளைப் பொலிஸார் மீட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.



வெடிபொருள்களுடன் கையடக்கத் தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவத்தின் பின்னர் குண்டு செயலிழக்கும் பிரிவினர் அந்தப் பகுதிக்கு வந்து வெடிபொருள்களை செயலிழக்க வைத்தனர். (சி)

## முள்ளிக்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று விடுதலைப் புலிகள் உத்தரவாதம் வழங்கி யுள்ளதாகவும் ஆயர் கூறினார். (அ)

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13பேர் வலி. தெற்கில் சிக்கினர்

யாழ்ப்பாணம், செப்.6

வலி. தெற்கில் பல இடங்களில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தேடுதலில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 13 பேர் சிக்கினர்.

சுன்னாகம் பொலிஸாரும் மின்சாரசபை அதிகாரிகளும் இணைந்து இத்திடீர் தேடுதலை சுன்னாகம், கந்தரோடை, மருதனார் மடம், இணுவில் ஆகியபகுதிகளில்மேற் கொண்டனர்.

அப்போது 13 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

ஒவ்வொருவருக்கும் 15ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் அபராதத் தொகையைச் செலுத்த மறுத்தார். சம்பந்தப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-202)

# சமஷ்டி, அதிகாரப் பகிர்வு ஆகியவை மூலமாகவல்ல; புலிகளை அழித்தொழிப்பதன் மூலம் மட்டுமே தீர்வு!

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. தரப்பு சூளுரை

அதிகாரப் பகிர்வுமூலமோ அல்லது சமஷ்டி மூலமோ தமிழர்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்கமுடியாது. புலிகளை ஒட்டுமொத்தமாக ஒழித்துக்கட்டி மூவின மக்களிடமும் ஒற்றுமையை உருவாக்குவதன் மூலமே தமிழரின் பிரச்சினை தீரும். அந்த ஒற்றுமையை உருவாக்க நாம் முழு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்''

- இவ்வாறு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸ்ஸநாயக்க நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற - வடக்கு, கிழக்கு நிலைமை தொடர்பான - விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் - முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு பயங்கரவாதிகள் பெரும் தடையாகவுள்ளனர். இந்தப் பயங்கரவாதத்தை உடனடியாக அழித்துவிடவேண்டும். இல்லையேல் எதிர்கால சந்ததியினர் மிகவும் பாதிக்கப்படுவர்.

கடந்தகால அமைதிப் பேச்சின்போது, அதைப் பயன்படுத்திப் புலிகள் அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் பலமடைந்தனர் என்பதுதான் வரலாறு.

யுத்தம் மூலமாக பிரச்சினையைத் தீர்க்கும் வழியை விரும்புபவர்கள் புலிகள்தான். அரசல்ல. அரசு யுத்தப் பாதையைத் தெரிவுசெய்வதற்கு புலிகளே அரசை நிர்ப்பந்தித்துள்ளனர்.

யுத்தத்தில் மனித உரிமை மீறல், ஊழல் உள்ளிட்ட பல விடயங்கள் அடங்குகின்றன. அதில் அசிங்கமே உள்ளடங்கியுள்ளது. யுத்தத்தின் உள்ளடக்கம்தான் மனித உரிமை மீறலாகும். எந்த யுத்தமும் மனித உரிமையைப் பாதுகாத்தது கிடையாது.

அதற்காக இத்தகைய மனித உரிமை மீறல்களைத் தடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். - என்றார். (சி)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses...
* Computerized Accounting
(Tally, Accpack, MYOB, QuickPro)
* MS Office *DTP *V.B., .net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD *3D Designing
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5

புதிவுகள் 07-09-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP

இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.

MCS Supported By UNDP/JRRP

பதிவுகள் 07-09-2007 முன் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

BRIGHTMAN
PHYSICS
Paper Class
★ அலகு ரீதியான மீட்டல்
★ கடந்தகால வினா விடை
★ மாதிரி வினா விடை
Note : நீண்ட இடை வெளிக்குப் பிறகு எமது வரையான பௌதிகவியல் ஆசிரியர்
ஆரம்பம்: 08.09.2007
Sat. 2 p.m.
(அனுமதிக்கு முந்துங்கள்)


## திருமலை - முல்லைத்தீவுக்கு...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர், சம்பூர் மக்களைத் திட்டமிட்டு அரசு வெளியேற்றியது. சம்பூரை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது.

இந்தப் பிரகடனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தவர்களில் ஒருவரின் வளவு உறுதி 100 வருடங்கள் பழைமையானது. இவ்வாறு அங்கு வெளியேற்றப்பட்ட அனைத்து மக்களும் இப்படி நீண்ட காலம் அந்த இடங்களில் வாழ்ந்து வந்தவர்கள்.

அந்த இடங்களில் இப்போது புலிகள் இல்லை. மீண்டும் அந்த மக்களை உடனடியாக அதே இடங்களில் மீளக் குடியமர்த்த வேண்டும்.

இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு நன்மைகள் எவையும் செய்யப்படவில்லை. அவர்கள் ஒரு கிராமத்தில் குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் சொத்துகளை இழந்துள்ளனர். அதற்காக அவர்களுக்கு ஒரு சதமேனும் நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அரசால் இழப்பு மதிப்பீடு தன்னும் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி எதுவுமில்லை. வாகரை போன்ற இடங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்படுவதையும் அரசு தடுக்கின்றது.

அந்த மக்கள் தொழிலில் நல்ல நிலைக்கு வந்துவிடுவார்கள் என்பதாலேயே அரசு இவ்வாறு செய்கின்றது. இவ்வாறு இனப் பாகுபாட்டுடன் செயற்படுவதை அரசு நிறுத்த வேண்டும். தமிழரின் நலனைப் பாதுகாக்க அரசு நல்லதொரு திட்டத்தை வகுத்துக்கொண்டு செயற்பட வேண்டும்.

### வடக்கு - கிழக்கு இணைப்பே தமிழ் மக்களின் அபிலாசை

வடக்கு, கிழக்கைப் பிரிக்க அரசு எடுத்த தீர்மானம் பாரதூரமானது. வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்தும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அடித்தளமாகவிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி வடக்கு - கிழக்கைப் பிரிக்க மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆணையில்லை. இணைப்புத்தான் தமிழர்களின் அபிலாஷை. அதை இல்லாதொழிக்கும் அதிகாரம் அவருக்கில்லை.

இலங்கையின் முன்னைய நான்கு ஜனாதிபதிகள் வடக்கு - கிழக்கு இணைப்பைத் தொடர்ச்சியாக ஏற்றுக்கொண்டனர். இந்த இணைப்பை புலிகளுடன் தொடர்புபடுத்தி பிரித்தமை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

தமிழர்கள் இது தொடர்பான தமது நியாயமான அபிலாஷைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள்.

தமிழர் போராட்டம் பிறப்பதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே இணைப்புப்பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. வடக்கு - கிழக்கு தனியலகு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருகிறது.

நான் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசியபோது, வடக்கு, கிழக்கு இணைப்பு சமாதானத்தின் அத்திவாரம் என்றும், அது தக்கவைத்துக் காக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தேன். அதைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என அவர் என்னிடம் கூறினார்.

ஜே. ஆர். ஜெயவர்தனா மரணிப்பதற்கு முதல் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்குப் பேட்டி ஒன்றை வழங்கியிருந்தார். அதில் வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு சமஷ்டி தான் சரியான தீர்வு என்று கூறினார்.

இதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனத்தில் எடுக்க வேண்டும். மஹிந்த அவரது உலகில் - நினைப்பில் - நின்று இதைப் பார்க்கக் கூடாது.

### காணிப் பறிப்பு - சிங்கள மயமாக்கல் செயற்பாடு

திருமலையில் முஸ்லிம் கிராமத்தில் முன்னாள் படையினர்களுக்காக ஐயாயிரம் வீடுகள் அரசால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஏன் முஸ்லிம்களின் காணியைப் பறித்தீர்கள்? இந்தப் படையினருக்கு வீடுகளை நிர்மாணிக்க சிங்களப் பிரதேசத்தில் காணிகள் இல்லையா?

ஏன் திருமலையில் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் காணிகளைப் பறித்து இவ்வாறு சிங்களவர்களைக் குடியமர்த்துகிறது இந்த அரசு. இதுவொரு நன்கு திட்டமிடப்பட்ட சிங்கள மயமாக்கல் செயற்பாடே.

புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக நான் அறிகின்றேன். திருகோணமலையிலும் முல்லைத்தீவிலும் உள்ள சில கிராமங்களை உள்ளடக்கி சிங்கள மாவட்டம் ஒன்றை அரசு நிர்மாணிக்கவுள்ளது.

அந்த முயற்சியை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும்.

இவையெல்லாம் ஒருபோதும் சமாதானத்தைக் கொண்டுவரா.

### ஹெல உறுமயவுடன் ஒப்பந்தம்

மஹிந்தவும் ஜாதிக ஹெல உறுமயவும் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கமையவே இந்நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

நிர்வாக அலகுகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக மஹிந்த செயற்படுகின்றார்.

யாழில் மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் உயிருக்குப் பயந்து தஞ்சமடைந்துள்ளனர். எம்மை சிறையில் வையுங்கள், இல்லையேல் நாம் அரசால் கொல்லப்பட்டு விடுவோம் என்று அந்த மக்கள் ஆணைக்குழுவிடம் கூறியிருக்கின்றனர். இதுவரை 65 பேர் இவ்வாறு தஞ்சமடைந்துள்ளனர்.

மனித உரிமைகள் தொடர்பாகக் கண்காணிக்க ஐ. நா. மனித உரிமை கண்காணிப்புக்குழுவொன்று இலங்கைக்கு வருவது தற்போது மிக அவசியம். - என்றார். (சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org